பூங்கா நகர் எம்ஆர்டிஎஸ் - மெட்ரோ - சென்ட்ரலை இணைக்கும்

# பிரம்மாண்ட சுரங்கப் பாதை 3 மாதங்களில் திறப்பு

■ சென்னை

சென்னை பூங்கா நகர் பறக்கும் ரயில் நிலையத்தில் இருந்து மெட்ரோ மற்றும் சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு செல்ல பிரம் மாண்ட சுரங்கப் பாதை அமைக்கும் பணி இறுதிக்கட் டத்தை எட்டியுள்ளது. இந்த சுரங்கப் பாதை 3 மாதங்களில் திறக்கப்பட உள்ளது.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் எதிரே, பூந்தமல்லி நெடுஞ்சாலையின் கீழே, 70,060 சதுர அடி பரப்பளவில், சுரங்க மெட்ரோ ரயில் நிலையம் ரூ.400 கோடி செலவில் பல்வேறு வசதி களுடன் அமைக்கப்பட்டு வருகி றது. இங்கிருந்து சுரங்கப் பாதையில் எழும்பூர், கோயம்பேடு வழியாக மெட்ரோ ரயில் வசதி கடந்த மே மாதம் தொடங்கப்பட்டது.

இதற்கிடையே, வண்ணாரப் பேட்டையில் இருந்து வரக்கூடிய மெட்ரோ ரயில் இந்த நிலை யத்தின் 2-வது தளத்தில் வந்து இணைந்து அண்ணா சாலை வழியாக பரங்கிமலை செல்லும். அதற்கான பணிகளும் நடந்து வருகின்றன.

வெளியூர் எக்ஸ்பிரஸ் ரயில்கள் வந்துசெல்லும் சென்ட்ரல் ரயில் நிலையம், அதன் அருகே புறநகர் ரயில் முனையம், எதிரே பூங்கா நகர் புறநகர் ரயில் நிலையம், அதை அடுத்து பூங்கா நகர் பறக்கும் ரயில் நிலையம் ஆகியவற்றோடு தற்போது மெட்ரோ ரயில் நிலையமும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு ரயில் நிலையங்கள் இணையும் முக்கியமான சந்திப்பு என்பதால் மக்கள் கூட்டம் எப் போதும் அதிகமாக இருக்கும். எனவே, மெட்ரோ ரயில் நிலை யங்களில் இருந்து சென்ட்ரல் உள்ளிட்ட இடங்களுக்கு செல்லும் வகையில் சுரங்கப் பாதைகள் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து பல்வேறு இடங்களுக்கு நூற்றுக் கணக்கான விரைவு ரயில்களும், அருகே உள்ள மூர்மார்க்கெட் வளாகத்தில் இருந்து திருவள் ளூர், அரக்கோணம், கும்மிடிப் பூண்டி, சூலூர்பேட்டை உள் ளிட்ட புறநகர் பகுதிகளை இணைக்கும் வகையில் நூற்றுக் கணக்கான மின்சார ரயில்களும் இயக்கப்படுகின்றன. இவற்றின் மூலம் தினமும் லட்சக்கணக் கானோர் பயணம் செய்கின்றனர்.

எனவே, பயணிகளின் வச திக்காக சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து மற்ற இடங்களுக்கு செல்ல மொத்தம் 5 சுரங்கப் பாதைகள் அமைக்க திட்டமிடப்பட்டது. அதில், பூங்கா நகர் மின்சார ரயில் நிலையத்தில் இருந்து மூர்மார்க் கெட், ரிப்பன் மாளிகை செல்லும் வகையில் புதிய சுரங்கப் பாதை திறக்கப்பட்டுள்ளது.

இதேபோல, பூங்கா நகர் பறக்கும் ரயில் நிலையத்தில் இருந்து மெட்ரோ மற்றும் சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு செல்ல 45 மீட்டர் நீளம், 11 மீட்டர் அகலத்தில் பிரம்மாண்ட சுரங்கப் பாதை அமைக்கும் பணிகள் முடியும் நிலையில் உள்ளன. அடுத்த 3 மாதங்களில் இந்த சுரங்கப் பாதை மக்களின் பயன் பாட்டுக்கு திறக்கப்படும்.

மற்ற 3 சுரங்கப் பாதைகளும் அண்ணா சாலை வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவை தொடங் கும்போது படிப்படியாக தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.